DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM
JUDICIAL MAGISTRATE COURT, ANNUR.
Case No.S.T.C. No. 185/2024

**பு.சா. 1 – காண்ஸ்டன்டினா க–பெ.முருகேஸ்            நாள் – 17.07.2025.**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் சொந்த ஊர் நீலகிரி கூடலூர் ஆகும். கடந்த 2006 ஆம் ஆண்டிலிருந்து அன்னூரில் இருக்கிறேன். முதலில் கணவருடன் தான் இருந்தேன். தற்போது பிரிந்துள்ளேன். நான் ஜோசியம் பார்க்க சென்ற இடத்தில் எதிரி ஒரு குழுவாக சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார் அந்த வகையில் எனக்கு பழக்கமானார். எதிரிக்கு சொத்துக்கள் உள்ளதா என்று எனக்கு தெரியாது. எதிரி செல்போன் டவர் தொடர்பாக வேலை செய்தார் என்று தெரியும். அவர் அன்னூருக்கு எப்போது வந்தார் என்று எனக்கு தெரியாது. நான் உரிமம் பெற்று தான் பள்ளி நடத்தி வருகிறேன். பள்ளியின் பெயரில் வருமான வரி செலுத்தி வருகிறேன். வருமானவரி கணக்கில் எதிரிக்கு கொடுத்த பணத்தை காட்டியுள்ளேனா என்றால் ரூ.3 லட்சத்தை காட்டியுள்ளேன்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.